செ.வெ.எண்.73 நாள்.30.01.2026

# புதுக்கோட்டை மாவட்டம்
# பத்திரிக்கை செய்தி

---

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2025-26 ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவு கூட்டத்தொடரின் போது 14.03.2025 அன்று அமைச்சர் நிதி மற்றும் சுற்றுச்சுழல் காலநிலை மாற்றத்துறை அவர்களால் ஏனைய வற்றுடன் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அரசுப்பணியாளர்களுக்கான தேர்வுகளில் மாற்றுத்திறனாளிகளுக்கென நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் 4 சதவீதம் இடஒதுக்கீடு மூலம் கடந்த 4 ஆண்டுகளில் இதுவரை 1493 மாற்றுத்திறனாளிகள் பணியமர்த்தப்பட்டுள்ளதை தொடர்ந்து தனியார் துறைகளிலும் மாற்றுத்திறனாளிகள் பணியமர்த்தப்படுவதை ஊக்குவிக்கும் பொருட்டு தனியார் நிறுவனங்கள் ஒவ்வொன்றுக்கும் குறைந்தது 10 மாற்றுத்திறனாளிகளைப் பணியமர்த்தி இருந்தால் அத்தகைய நிறுவனங்களுக்கு மாதந்தோறும் ஒரு நபருக்கு இரண்டாயிரம் ரூபாய் வீதம் ரூ.24000 ஊதிய மானியமாக ஒரு ஆண்டிற்கு வழங்க முடிவெடுத்து அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி திட்டத்தில் ஊதிய மான்யம் பெறும் பொருட்டு தனியார் நிறுவனங்கள் கொடுக்கப்பட்டுள்ள (https://forms.gle/KpThjwGTCKVGiYfW9) Google link-ல் விண்ணப்பிக்குமாறும் இதன்மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு 04322-223678 என்ற தொலைபேசி எண்ணிணை தொடர்பு கொள்ளலாம் எனவும் இதன்மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai